**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) - TAMIL NADU FOR THE PROPOSED BLACK GRANITE QUARRY OF M/s. TAMIL NADU MINERALS LIMITED, OVER AN EXTENT OF 8.46.0 HEC LOCATED IN S.F.NO. 315, 316 AND 317/1, SATHANUR VILLAGE, THANDRAMPATTU TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 13.11.2024 AT 11.00 AM IN M/S. SRI VENKATESHWARA THIRUMANA MAHAL, SATHANUR VILLAGE, THANDRAMPATTU TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru.D. Baskara Pandiyan, IAS., | District Collector, Tiruvannamalai District, Tiruvannamalai. |
| 2. | Tmt. T. Kalaiselvi, | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 3. | Thiru. K. Prem Kumar | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 4. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 5. | Tmt. A. Amutha | Assistant Manager, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 6. | Public and Environmentalists | 39 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai welcomed the respected District Collector, Tiruvannamalai, other Government Officials, General Public, and Environmentalists for the Public Hearing meeting for the proposed Black Granite Quarry.

The District Environmental Engineer informed that as per theEnvironmental Impact Assessment Notification 2006, all the projects and activities listed in the schedule to the notification shall require prior Environmental Clearance from the Ministry of Environment, Forests and Climate Change, GOI / State Environment Impact Assessment Authority. The process of obtaining Environmental Clearancefor certain cases involves

public consultation, and hence the public hearing meeting is being conducted today for the proposed Black Granite Quarry ofM/s. Tamil Nadu Minerals Limited, over an extent of 8.46.0 hectare in Sathanur Village, Thandrampattu Taluk, Tiruvannamalai District.

As per theEnvironmental Impact Assessment Notification 2006, it is mandatory to conduct public hearing meeting where the opinions of the public will be obtained through oralor in written statementsand the minutes of the meeting will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority for the mining projects (Individual or Cluster extent) above 5 hect of area. The public notices for this public hearing meeting were published in dailies of "New Indian Express" (English) & "Dina Malar" (Tamil) on 02.10.2024with the approval of the District Collector, Tiruvannamalai for this proposed Black granite Quarry of M/s. Tamil Nadu Minerals Limited.

Further, the District Environmental Engineer informed that proposed project and Environmental Impact Assessment Study report details will be explained through power point presentation by the project proponent. After that, public can express their views, suggestions and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority.

The District Collector instructed the project proponent to explain about the proposed Blackgranite Quarry and the particulars of the Environmental Impact Assessment study conducted by them to the public in detail.

On behalf of the project proponent Thiru. E. Ganesan, Deputy Manager, M/s. TamilNadu Minerals Ltd,explained the details of the project and theEnvironmental Impact Assessment study conducted by them through power point presentation.

Then the District Collector, Tiruvannamalai requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one after registering their name and address.

The following are the views represented by the public.

**1. Mr.Arivazhagan, Sathanur Village,**

He greeted the District Collector and officials and expressed his views as follows: I have been living in Sathanur village for 48 years. Currently, through the Tamil Nadu Minerals Limited Company, you have come to the public seeking environmental permission for setting up this quarry under the Sathanur panchayat. I am going to record some comments about this village. The same mineral resource company has been mining mineral resources at three places in Sathanur Panchayat area for more than 30 years. Due to the extraction of these mineral resources, the people of this Sathanur panchayat have suffered a lot of damage. Central government and Tamil Nadu government should not issue this environmental clearance so that the damage does not happen again. Now I am going to tell what problems these people are facing because of the existing quarries. Two members of the same family - a woman named Pachaimmal and her daughter Monisha - died at the site where the black stone was quarried. They both died in March 2021. After the quarry was commissioned, the officials of the Tamil Nadu Minerals Limited did not visit the quarry crater in person. Even today the pits formed in Sathanur because of the quarries are not closed and the area remains an unsafe environment. When people go to the place to bathe or wash clothes, they get into it without knowing its depth, causing casualties. After the death of Monisha and Pachaiammal, one Mr. Ponmudi, a resident of Alapangutta village in Sathanur Mathura, went to bathe and drowned in the water. There have been three deaths in a single crater. A baby girl was found dead in the quarry pit near this 8-hectare plot of land where you are proposing the establishment of this new quarry. A total of four fatalities. Also, this mineral resource company has not spent even a single rupee from the revenue earned from the extraction of mineral resources either to the Sathanur village Panchayat or the nine surrounding

villages of Sathanur. Similarly, no one visited from the Tamil Nadu Minerals Limited company for these four casualties. We don't even know if the news of the deaths had reached them. We villagers have arranged for the postmortem, got the death certificates and buried them. Based on this we have all the documents to prosecute but even so no compensation has been awarded for the loss of lives. Now we are 50 percent healthy. Already, a private sugar mill is operating in a nearby village, as per the meeting held at the district collector's office without obtaining environmental clearance. Even today we are suffering from dust allergy caused by the particulates from that sugar factory. Currently, there is a 75 percent chance of respiratory distress for the people. Let me give you an example, if you wash a white dhoti at night and leave it to dry on the terrace clothesline, the dhoti would have turned black due to the pollution of the air caused by the factory's activities. Such an amount of air pollution is now being in prevalence. Therefore, pollution would definitely happen in this granite quarry that you are now proposing. There will also be noise pollution. In your reference to noise pollution in the presentation, you said a depth of 31 feet length. That is, you are planning to construct a quarry to a depth of 100 feet. If a quarry is constructed at a depth of 100 feet, it should be borne in mind that there are agricultural lands around the quarry. All the wells on these agricultural lands will be affected. When the groundwater level decreases, agriculture will suffer. Therefore, this environmental clearance should not be granted to this project. No permission should be given to extract mineral resources at Sathanur Panchayat or any town for this matter. Similarly, those existing pits dug by this mineral company to a depth of about 60 to 70 feet, without even a perimeter fence for more than 25 years, causing casualties, should be closed immediately. The Tamil Nadu Minerals Limited company should be immediately involved in this problem and the people of Sathanur should be given life protection. On behalf of the people of Sathanur panchayat, I, Arivazhagan, a social activist, make this request to you. Today there are so many problems in Sathanur panchayat. However, the government does not seem to have heeded any of the problems. About 70 years ago, water was supplied to all the towns in the

District from the same Sathanur Dam for basic needs. However, only after 50 years of construction of the planned Sathanur Dam, the joint drinking water project was implemented after public protests. Similarly, this Sathanur village with a population of around 15,000 and 8000 voters does not even have a primary health center till date. The health center, which was commissioned when Sathanur Dam was built after a great struggle is located just opposite this meeting hall without even basic facilities. In this village of around of 20,000 people, not even a primary health center has been set up.

**(At this juncture, the District Collector asked the speaker to express his views pertaining to this project onlyand not on other irrelevant subjects)**

Then, Mr. Arivazhagan said, my request is that the government should provide all the basic facilities to this village. Think about how much revenue Tamil Nadu Minerals Limited company earned from these 3 quarries before, how much mineral resources you took away from Sathanur village and how much revenue you gave for this village in return. We put it on record that in future, no extraction of mineral resources from Sathanur village should be carried out. If not, we will not grant permission on behalf of the people of this village. Therefore, environmental clearance should not be granted by Central and State Governments to this project. He concluded his speech by stressing that this Black Granite Quarry should not be established in Sathanur village.

**2. Mr.Murali Mohan, Social Activist, Sathanur Village,**

He greeted the District collector, Tiruvannamalai for presiding over this meeting and wished the TNPCB officials, public and social activists who are present in the meeting and expressed his views as follows: My opinion is the same as the one expressed by Mr. Arivazhagan who spoke earlier. There seems to be hope & goodwill when thinking on the lines of development projects in this village for which we are getting so much income. But based on our experience, we say that this is also a scam. Mr. Arivazhagan spoke about four human casualties. But more than 20 goats and cows are dead because of quarrying activities in this area. There is no protection. The old

man here whose daughter-in-law and granddaughter are dead because of the existing quarries has not even been paid a single rupee as compensation or relief measures. When that is the case, this development work is also a sham. All the wells in our town are in the highlands. If a 100 feet trench is dug here, all the well water will reach that trench. What will the farmers do if the water gets to that quarry pit? Sathanur Dam here is of no use to us. We have requested water for agriculture from Sathanur Dam. This is also a development work. But by not implementing such developmental works you are destroying the mineral resources here instead. Firstly, account for the mineral resources already taken. Tell me how many trees you planted. Plant trees in existing mineral deposits. Cover those craters. Build a fence around it. After doing all this, come back and ask if you can extract the minerals from here. Please let the bereaved families be compensated from the wealth accumulated from these extracted mineral sales. Compensation should also be given for the death of goats and cows. So, we don't want this mineral extraction project. Provide agricultural dam water for irrigation. Bring an IT park in this area. Don't destroy natural resources. We have no faith in this Tamil Nadu Minerals Limited company. They will come and destroy the mountains and tell you that you will have all the benefits. They will leave it as it is. There is no place even to graze goats and cows there. Therefore, our view is that this mineral resource mine should not come up. Trees should be planted where minerals have already been extracted. A fence should be erected. Compensation should be given to the bereaved families. Compensation should also be given to the families whose goats and cows have died. He concluded his speech by saying that we do not want this mineral extraction quarry in Sathanur village.

**3.Mr. Raji, Sathanur Village,**

He said that my daughter-in-law Chennammal and grand-daughter Monisha both died three years ago after going to fetch water from the existing quarry ditch. No compensation was given for this. Therefore, we have no desire to welcome this project (quarry). Carry out plantations and don't establish the quarry. We didn't get any compensation. The child

suffers without its mother. We have submitted petitions at all places including the District Collector's Office and Taluk Office. However, no funds have been provided even after three to four years. Is the quarry being proposed to kill people, goats and cows? Carry out plantations, build factories and give employment to people. He concluded his speech by saying, "We don't want this black granite quarry."

**4.Mr. Hariharan, Sathanur Village,**

He greeted his wishes to everyone including the District Collector and expressed his views as follows: The villagers used to practice agriculture throughout the year before the arrival of quarries. No borewells were used for agriculture. Count how many bore wells there are after the advent of quarries. I myself along with many farmers have gone and petitioned the Department of Geology & Mining regarding the drying up of wells for the last 10 to 15 years. There is no proper response from the officers of the department. When I told the officer that even after the contract period is over, they are extracting minerals and blasting stones, he said that the contract period is over and that is not the case. So the officials are not even coming to inspect anything. We are running for daily survival and our lives should not be about protesting and pointing out the wrongdoings of governments. The benefits of the project should be proclaimed well before starting a project. But you are coming after obtaining all the orders of the government. It is like carrying out all decisions and saying about thinking of the same. Has any government official come to see how many wells there were at the existing quarry sites and how it is now? None of the government officials can tell me that there are so many wells and they are planting crops. The current situation is a witness to this. Even today 40 to 50 acres in the area cannot be cultivated. If the district collector comes, we are ready to show the same to him even this minute. There are people who left this town because they could not grow crops. The goats and cows died because of not getting sick, but because of drinking the left alone water mixed with explosives at the site. Two lives were lost falling into the 100-foot pits of the existing quarries. People should not file a case; the government should strive

to file a case against the company. Two people have lost their lives in the pits of the quarries and the government should ask the company about their response to this. The victim is still hoping that the government will help. The government should have done this first. But it didn't. How many years has it been since they vacated the old quarry? The Tahsildar must have come and seen it. If we ask, they say they come and supervise on a weekly or monthly basis. If done so, two lives would not have died. It is not possible for them to say how many times they visited, how many times they sent notices, or how many cases were filed. Because everyone has jobs to do. Life is not respected here. They said in the appraisal report that they are exporting the cut stones to China and Japan, and I wanted to ask, are there no mountains in China and Japan? There are. There are mountains everywhere. But there are people to ask right questions over there, here there are no people to ask such questions. This is the truth. Import mineral resources from abroad, and don't take mineral resources from here. Would you want the mineral wealth to exhaust in this generation? How many generations after us are dependent on these mineral resources! Man is not the only living thing in this planet, and he needs to include every creature in his consideration. We should not be the only ones to benefit from it. 60 years later, if Tamil Nadu needs mineral wealth, who will provide it? Will China and Japan give? Give people development plans. You say we are to be given 4 lakhs, what will you do with this, you will build a park or renovate a hospital. What about the irony in clearing forests and planting trees in schools instead? The entire forest is destroyed. Did the District Collector come and inform on the expiration of the quarry's contract? Have you taken a survey to see how affected the farmers around you are? When doing project evaluation, you say you'll do this and that like a new movie released today. But who maintains the records of it? No immediate action was taken on the petitions given by the people. They detonate the explosives at 6 in the morning before we wake up from our sleep. There are schools around. A total of 15 school vehicles are going in the morning and evening. How will school vehicles move when heavy vehicles from quarries are driving on 8-foot roads?

**(At this juncture, the District Collector asked the speaker to express his views pertaining only to this project and not on other irrelevant subjects)**

Then he continued: We are saying only after seeing the problems caused by the quarry. Our panchayat does not need the income from this quarry. We have no wish to welcome this quarry. He then concluded his speech by saying that if this quarry gets established, we will gather the people and hold a huge protest against it.

**5.Mr. Shanmugan, Sathanur Village,**

He greeted the public with special mention to the District Collector and expressed his views as follows: I am from the Farmers Union. I know all the problems caused by this quarry. And he concluded his speech by saying that permission should not be granted for this project.

**6.Mr. Ravi, Nayakanoor Village,**

He greeted everyone in the gathering and expressed his views as follows: My home town Nayakanoor village is just 1 km away from here. First, I register my opposition to this proposal. There are many false statements in the project report submitted by the Deputy Manager of Tamil Nadu Minerals Limited (TAMIN). There are many opinions against this. Let's not go into it. I will conclude with just four comments in this regard. The Deputy Manager of TAMIN says they are no fossils located within 15 km from the site. On the contrary, Veeranam area here is a site of Neolithic remains recognized by the Archaeological Survey of India (ASI). Kappikal hill is only 1 km away from the proposed quarry site. Sathanur and Veeranam areas are rich in ancient archaeological remains. I can tell you that there are many Pallava Dynasty remains in the sites of Sathanur, Veeranam and Mallikapuram Villages. Sathanur is an ancient commercial town with a rich history of almost 10,000 years. Today it may have gone backwards. The Deputy Manager of TAMIN has lied that there are no archaeological remains at this place. I cannot accept this. The rule is that no factories should come up where there are archeological remains. Is the government going to violate this rule? Secondly, the deputy manager says things about environmental zone, but I'm not sure how he says it. This eco zone spans 4000 square

kilometers encompassing region from Cuddalore to Nanjudurgam. If you dig that mountain and take away a stone, it will keep falling. A mountain is not only a mountain but a place of water storage. The mountains trap water during rainy season and let it out during summer. If this mountain is quarried, what will the people around it do for water? I can say the situation is same till Krishnagiri and Dharmapuri district. Similarly, if the rocky mountains are cut, around10 districts of the State will have to go to other states like Karnataka, Andhra Pradesh and Kerala to survive the ensuing famine. You are making 2 crore people vulnerable but say that you will provide employment to only 30 people. Do we have to starve to death? We supply water to all the villages from Sathanur Dam up to Kannamangalam village. I ask everyone if they want to die without water. He is speaking about such an important region by keeping only a piece of paper in his hand. The authorities of this proposed quarrydo not even say what kind of stone it is. First quality stone is available only in our Tamil Nadu. Such stones cannot be seen anywhere. You export such stones to Germany, Italy, Japan, Arab countries and earn money. We will definitely not allow this plan to materialize. What are we going to gain in dragging all the people to roads and giving employment to only 30 people? He concluded his speech by registering his opposition to the plan by saying that he agrees to the views of those who spoke earlier.

**7.Mr. Velayutham, Sathanur Village,**

He said, here in the existing quarries, because of the debris from blasting, a person's leg has been broken. Many birds die after drinking that water. No official came to see this. Even though I told the District Collector many times, he did not listen. So, we don't want this quarry project. He ended his speech shouting protests against this proposed project.

**8.Mr. Karthigeyan, Social Activist, Sathanur Village,**

He said, we don't want this granite quarry. Only by growing trees will it rain. Agriculture can be done only when it rains. How can agriculture be done if mountains are quarried? Can you eat money instead of food? Do you

eat food or cat money? Why are you trying to destroy agriculture? How many days can we eat with the money you give. So, he ended his speech protesting this proposed project by saying, "We don't want this granite quarry."

**9.Mr. Murugesan, Sathanur Village,**

He said that many people would be affected by this quarry. We had a teacher named Arumugam. He and all the people could not go beyond the quarry site to their respective farms for carrying out agriculture activities. Therefore, he ended his speech protesting against the project by saying, "We don't want this granite quarry."

**The following 2 members of the public have expressed their objection in writing that they are against the establishment of this proposed quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1 | Thiru. C. Hariharan,<br>S/o. Sekar,<br>Nam Tamilar Katchi<br>MavattaTalaivar,<br>Sathanur Village,<br>ChengamTokuti,<br>Thandrampattu Taluk,<br>Tiruvannamalai District. | Expressed objections against the quarry proposal. |
| 2 | Thiru. Raji,<br>Sathanur Village,<br>Thandrampattu Taluk,<br>Tiruvannamalai District. | Expressed objections against the quarry proposal. |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the District Collector's approval, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 02.10.2024 for notifying the public hearing meeting.
2. The certificate issued by the Village Administrative Office for the Tom and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 5 & 39 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing \ Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received through Public Hearing Meeting – 2 numbers.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**District Collector,**
**Tiruvannamalai.**

**திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் கிராமம், புல எண்கள். 315, 316 மற்றும் 317/1-ல் 8.46.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கருப்பு கிரானைட் குவாரிக்கு மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 13.11.2024 அன்று திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் கிராமம், தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மஹாலில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

பங்கேற்றோர்:

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. பாஸ்கர பாண்டியன் IAS., | மாவட்ட ஆட்சியர்,<br>திருவண்ணாமலை. |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி, | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 3. | திரு. K. பிரேம் குமார் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 4. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 5. | திருமதி. அ. அமுதா | உதவி மேலாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 6. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (39 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களையும், அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு

வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள கருப்பு கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சசூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் கிராமம், மொத்தம் 8.46.0 ஹெக்டர் பரப்பளவில் தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கருப்பு கிரானைட் குவாரி சுரங்க நிறுவனமானது கருப்பு கிரானைட் கல் வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006–ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் உள்ள குவாரி சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் கருப்பு கிரானைட் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மஹால் 13.11.2024 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறுமென நியூ இந்தியன் எக்ஸ்பரஸ் மற்றும் தினமலர் செய்தி தாள்களில் 02.10.2024 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும்.

தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்" என தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. E. கணேசன், துணை மேலாளர், தி/எ். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**<u>1. திரு. தே. அறிவழகன், சாத்தனூர் கிராமம்,</u>**

இவர் கூறுகையில், மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளுக்கு வணக்கம். 48 வருடங்களாக நான் சாத்தனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்பொழுது, கனிம வள நிறுவனத்தின் மூலம் சாத்தனூர் ஊராட்சி எல்லைக்கு உட்பட்ட இந்தக் கல்குவாரி அமைப்பதற்காக சுற்றுச்சூழல் அனுமதி கேட்டு பொதுமக்களிடம் வந்து இருக்கிறீர்கள். இந்த கிராமத்தை குறித்து சில கருத்துக்களை நான் இங்கு பதிவு செய்கிறேன். இதே கனிம வள நிறுவனம், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சாத்தனூர் ஊராட்சி பகுதியில் மூன்று இடங்களில் கனிம வளங்களை வெட்டி இருக்கிறீர்கள். இந்த கனிம வளங்கள்

வெட்டி எடுக்கப்பட்டதால், இந்த சாத்தனூர் ஊராட்சி பொதுமக்களுக்கு நிறைய சேதங்கள் ஏற்பட்டு இருக்கிறது. அந்த பாதிப்பு மீண்டும் ஏற்படக் கூடாது என்பதற்காக இந்த சுற்றுச்சூழல் அனுமதியை மத்திய மற்றும் தமிழக அரசு வழங்கக்கூடாது. அப்படி வழங்கும் பட்சத்தில் என்னென்ன பிரச்சனைகள் இந்த மக்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் இப்பொழுது கூறுகிறோம். கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு 3 கிரானைட் குவாரிகளை இங்கு அமைத்து, கிட்டதட்ட 100 அடி ஆழமுள்ள பாறைகளை வெட்டி எடுத்துவிட்டு, அந்த வெட்டி எடுக்கப்பட்ட குளம் போன்ற ஒரு அமைப்பு, ஏரி போன்ற அமைப்பை 25 ஆண்டுகளாக மூடாமல் விட்டதால், இதுவரை நான்கு உயிர் இழப்புகள் ஏற்பட்டு இருக்கிறது. அந்த கல்குவாரி பக்கத்தில் ஒரே குடும்பத்தை சார்ந்த இருவர் – பச்சையம்மாள் என்ற பெண்மணியும் மோனிஷா என்கிற அவருடைய மகளும் அந்த கருப்புக் கல் வெட்டி எடுக்கப்பட்ட இடத்தில் இறந்திருக்கிறார்கள். மார்ச் 2021 ம் ஆண்டு அவர்கள் இருவரும் உயிரிழந்தார்கள். அந்த கல்குவாரி அமைக்கப்பட்ட பிறகு கனிமவள நிறுவன அதிகாரிகள் கல்குவாரி பள்ளத்தினை நேரில் வந்து பார்வையிடவில்லை. இப்படி சாத்தனூரில் அமைக்கப்பட்ட பள்ளங்கள் இன்றளவும் மூடப்படவில்லை. இன்றும் பாதுகாப்பு அற்ற சூழலாக தான் அமைந்துள்ளது. பொதுமக்கள் குளிக்கவும் அல்லது துணி துவைக்கவும் அந்த இடத்திற்கு செல்லும்போது அதன் ஆழம் தெரியாமல் உள்ளே சென்றுவிடுவதால் உயிரிழப்பு ஏற்படுகிறது. மோனிஷா, பச்சையம்மாள் உயிரிழப்புக்கு பிறகு சாத்தனூர் மதுரா ஆலப்பங்குட்டை கிராமத்தைச் சார்ந்த பொன்முடி என்பவர் குளிக்க சென்று, அந்த நீரில் மூழ்கி இறந்தார். ஒரே பள்ளத்தில் மூன்று உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. தற்போது நீங்கள் அமைப்பதாக கூறப்படும் இந்த 8 ஏக்கர் நிலத்தின் அருகில் உள்ள கல்குவாரி பள்ளத்தில் ஒரு பெண் குழந்தை இறந்து இருக்கிறது. மொத்தம் நான்கு உயிரிழப்புகள். மேலும், இந்த கனிம வள நிறுவனம், இங்கு இருந்து கனிம வளங்களை வெட்டி எடுத்து ஈட்டிய வருவாயிலிருந்து சாத்தனூர் கிராமத்திற்கும் இந்த பஞ்சாயத்து நிர்வாகத்திற்கும் அல்லது சாத்தனூரை சுற்றியுள்ள ஒன்பது கிராமங்களுக்கும் ஒரு ரூபாய் கூட செலவினங்கள் செய்யவில்லை. அதே போல இந்த நான்கு

உயிரிழப்புகளுக்கும் தமிழ்நாடு கனிம வள நிறுவனத்திலிருந்து யாரும் வரவில்லை. முதலில் அவர்களுக்கு இந்த இறப்பு செய்தி சென்றடைந்ததா என்று கூட தெரியவில்லை. அவர்களுக்கு பிரேத பரிசோதனை செய்து, இறப்புச் சான்றிதழ் பெற்று அடக்கம் செய்து இருக்கிறோம். இதனடிப்படையில் வழக்கு தொடர்ந்ததற்கான அனைத்து ஆவணங்களும் எங்களிடம் இருந்தும், உயிரிழப்புகளுக்கான எந்த ஒரு நிவாரண தொகையும் வழங்கப்படவில்லை. இப்பொழுது நாங்கள் 50 சதவீதம் ஆரோக்கியமாக இருக்கிறோம், ஏற்கனவே, சுற்றுச்சூழல் அனுமதி பெறாமல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தின் மூலம், அருகில் உள்ள ஒரு கிராமத்தில் தனியார் சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. அந்த சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுகளால் ஏற்படும் தூசு ஒவ்வாமையால் இன்றும் பாதிப்படைகிறோம். தற்போதே, 75 சதவீதம் சுவாசக் கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் வந்துவிட்டது. உதாரணமாக ஒன்று சொல்கிறேன், இரவில் வெள்ளை வேட்டியை துவைத்து மாடியில் காய வைத்தால், காலையில் அந்த ஆலையின் காற்று மாசினால் அந்த வேட்டி கருப்பு நிறத்தில் மாறிவிடும். அந்த அளவு காற்று மாசு தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பொழுது நீங்கள் எடுக்கப்போகின்ற இந்த கிரானைட் குவாரியிலும் மாசு கண்டிப்பாக வரும். ஒலி மாசுபாடு ஏற்படும். நீங்கள் ஒலி மாசுப்பாடு குறித்து காட்டியதில், 31மீ அடி ஆழம் என்றீர்கள். அதாவது, 100அடி ஆழத்திற்கு குவாரி அமைக்க திட்டம் இட்டு இருக்கிறீர்கள். அப்படி 100 அடி ஆழத்தில் குவாரி அமைக்கும் பட்சத்தில், அந்த கல்குவாரி சுற்றி விவசாய நிலங்கள் தான் இருக்கிறது. விவசாய நிலத்தின் கிணறுகள் அனைத்தும் பாதிப்புக்கு உள்ளாகும். நிலத்தடி நீர்மட்டம் குறையும் பொழுது, விவசாயம் பாதிப்படையும். எனவே, இந்தச் சுற்றுச்சூழல் அனுமதியினை இனி வரும் காலங்களில் அறவே தடுக்க வேண்டும். சாத்தனூர் ஊராட்சி மற்றும் எந்த ஊரிலும் கனிம வளங்கள் எடுக்க அனுமதி வழங்கக்கூடாது. அதேபோல, இந்த கனிம நிறுவனத்தால் எடுக்கப்பட்டு சுமார் 60 முதல் 70 அடி ஆழம் வரை வெட்டப்பட்ட அந்த பள்ளங்கள், 25 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சுற்றுச்சுவர் வேலி கூட இல்லாமல், உயிரிழப்புகளை ஏற்படுத்துகிற அந்த பள்ளங்களை உடனடியாக மூட

வேண்டும். கனிம வள நிறுவனம் உடனடியாக இதில் ஈடுப்பட்டு, சாத்தனூர் மக்களுக்கு உயிர் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையினை சாத்தனூர் ஊராட்சி சார்பாக சமூக ஆர்வலர் அறிவழகன் ஆகிய நான் உங்களிடம் கோரிக்கையாக வைக்கிறேன். இன்றைக்கு சாத்தனூர் ஊராட்சியில் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கிறது. ஆனால், எந்த ஒரு பிரச்சனைக்கும் அரசாங்கம் செவி சாய்த்ததாக தெரியவில்லை. அடிப்படை வசதிகளுக்காக இதே சாத்தனூர் அணையிலிருந்து ஒரு 70 ஆண்டுகளுக்கு முன்பு எல்லா ஊர்களுக்கும் திருவண்ணாமலைகே சாத்தனூர் அணையிலிருந்து தான் தண்ணீர் சென்றது. ஆனால், திட்டதட்ட சாத்தனூர் அணை கட்டப்பட்டு 50 ஆண்டுகளுக்கு பிறகு தான் மக்கள் போராட்டத்திற்கு பிறகு தான் கூட்டுக் குடிநீர் திட்டமே செயல்படுத்தப்பட்டது. அதேபோல, சுமார் 15,000 மக்கள் தொகை, 8000 வாக்காளர்கள் உள்ள இந்த சாத்தனூர் கிராமத்தில், இன்றுவரை ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கூட இல்லை. சாத்தனூர் அணை கட்டப்பட்ட பொழுது அமைந்த சுகாதார நிலையம் இன்று பெரும் போராட்டத்திற்கு பிறகு இந்த மண்டபத்திற்கு எதிரில் ஒரு அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இருக்கிறது. கிட்டதட்ட 20,000 மக்கள் கொண்ட கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கூட அமைத்துதரப்படவில்லை.

**(இக்கட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்தத் திட்டம் சார்ந்து மட்டும் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்)**

பின்னர், திரு.அறிவழகன் கூறுகையில், அரசு இந்த கிராமத்திற்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துதர வேண்டும் என்பது எனது கோரிக்கை. இதற்கு முன்பு தமிழ்நாடு கனிம வள நிறுவனம் இந்த 3 குவாரிகள் மூலம் எவ்வளவு வருவாய் ஈட்டினீர்கள் என்பதை சிந்தித்து, சாத்தனூர் கிராமத்தில் இருந்து எவ்வளவு கனிம வளங்களை எடுத்து சென்றீர்கள், இந்த கிராமத்திற்காக எவ்வளவு வருவாய் கொடுத்தீர்கள் என்பதையும் சிந்தியுங்கள். இனிவரும் காலங்களில் சாத்தனூர் கிராமத்தில் கனிம வளங்களை எடுக்காதீர்கள், அப்படி எடுப்பீர்கள் என்றால் இந்த கிராம மக்கள் சார்பாக அனுமதி அளிக்க மாட்டோம் என்பதை நாங்கள் பதிவு செய்கிறோம். எனவே, சுற்றுச்சூழல் அனுமதியினை

தயவு கூர்ந்து மத்திய மற்றும் மாநில அரசு அனுமதி அளிக்கக் கூடாது. இந்தக் கல்குவாரி சாத்தனூர் பகுதியில் அமையக்கூடாது என்பதனை அழுத்தமாக கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**2. திரு. முரளிமோகன், சமூக ஆர்வலர், சாத்தனூர் கிராமம்,**

இவர் கூறுகையில், இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் வணக்கம். முன்பு பேசிய அறிவழகன் பேசிய கருத்து தான் என் கருத்தும். இந்த கிராமத்தில் வளர்ச்சி திட்டங்கள் என்பது இவ்வளவு கல் எடுக்கிறார்கள், நமக்கு இவ்வளவு வருமானம் வருகிறது என்று எல்லாம் நம்பிக்கை ஆசை எல்லாம் இருக்கிறது. ஆனால் ஏற்கனவே நாங்கள் பட்ட அனுபவத்தை வைத்து இதுவும் ஏமாற்று வேலை தான் என்று கூறுகிறோம். ஏனென்றால், அவர் பேசிய போது நான்கு மனித உயிரிழப்புகளை பற்றி கூறினார். ஆனால், 20க்கும் மேல் ஆடு, மாடுகள் இறந்து இருக்கின்றன. எந்த பாதுகாப்பும் இல்லை. இங்கு இருக்கும் வயதானவரின் மருமகள், பேத்தி இறந்ததற்கு இன்னும் ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. அப்படி இருக்கும் பொழுது இந்த வளர்ச்சி பணி என்பது ஏமாற்று வேலை தான். எங்கள் ஊர் அனைத்தும் வானம் பார்த்த பூமி தான், கிணறுகள் எல்லாம் மேட்டு பகுதியில் உள்ளது. இங்கு 100அடி பள்ளம் தோண்டினால் கிணற்று தண்ணீர் எல்லாம் அந்த பள்ளத்திற்கு தான் சென்றடையும். அந்த பள்ளத்திற்கு சென்றால், விவசாயிகள் என்ன செய்வார்கள். இங்கு சாத்தனூர் அணை இருந்தும் எங்களுக்கு எந்த பயனும் இல்லை. சாத்தனூர் அணையில் இருந்து விவசாயத்திற்கு தண்ணீர் கேட்டு இருக்கிறோம். இதுவும் வளர்ச்சி பணி தான். ஆனால் இந்த வளர்ச்சி பணிகளை செயல்படுத்தாமல் இங்குள்ள கனிம வளங்களை அழிக்கிறீர்கள். ஏற்கனவே எடுத்த கனிம வளங்களுக்கு எங்களிடம் கணக்கு சொல்லுங்கள். எத்தனை மரத்தை நட்டு வைத்தீர்கள் என்று சொல்லுங்கள். ஏற்கனவே இருக்கின்ற கனிம வள சுரங்கத்தில் மரங்களை நட்டு வையுங்கள். அந்த பள்ளங்களை மூடி கொடுங்கள். அதற்கு சுற்றி வேலி அமையுங்கள். இதெல்லாம் செய்து விட்டு வந்து இங்கு கல்

எடுக்கலாமா என்று கேளுங்கள். உயிரிழந்த குடும்பங்களுக்கு கனிம வளத் தொகையில் இருந்து இழப்பீடு வழங்க வேண்டும் என தயவு செய்து சொல்கிறேன். ஆடு மாடுகள் உயிரிழந்ததற்கும் இழப்பீடு வழங்க வேண்டும். எனவே, இந்த கனிம வள திட்டம் எங்களுக்கு வேண்டாம். விவசாயம் சார்ந்த டேம் தண்ணீர் பாசனத்திற்கு தாருங்கள். இங்கு ஐ.டி கொண்டு வாருங்கள். இயற்கை வளங்களை அழிக்காதீர்கள். இவர்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. வருவார்கள், மலையை வெட்டுவார்கள் உங்களுக்கு எல்லா சலுகைகளும் இருக்கும் என சொல்வார்கள். அப்படியே விட்டுவிட்டு போயிடுவார்கள். அங்கு ஆடு மாடுகள் மேய்க்க கூட இடம் இல்லை. ஆகவே, எங்கள் கருத்து என்னவென்றால் இந்த கனிம வள குவாரி வரக்கூடாது. ஏற்கனவே, கனிம வளம் எடுத்த இடத்தில் மரம் நட வேண்டும். வேலி அமைக்க வேண்டும். உயிரிழந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். ஆடு மாடுகள் உயிரிழந்த குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இந்த கனிம வள குவாரி எங்களுக்கு வேண்டாம் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**<u>3. திரு. ராஜி, சாத்தனூர் கிராமம்,</u>**

இவர் கூறுகையில், என் மருமகள் சென்னம்மாள், பேத்தி மோனிஷா, இருவரும் ஏற்கனவே உள்ள கல்குவாரி பள்ளத்தில் தண்ணீர் எடுக்க சென்று மூன்று வருடங்களுக்கு முன் உயிரிழந்தனர். இதற்கு எந்த இழப்பீடு தொகையும் வழங்கவில்லை. எனவே, இந்த கல்குவாரி வருவதற்கு எங்களுக்கு விருப்பம் இல்லை. செடி நடுங்கள், ஆனால் கல்குவாரி வரவேண்டாம். எங்களுக்கு எந்த நிதியும் கிடைக்கவில்லை. தாய் இல்லாமல் குழந்தை கஷ்டப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாலூக்கா அலுவலகம் உள்ளிட்ட அனைத்து இடத்திலும் மனு கொடுத்துள்ளோம். ஆனால், மூன்று நான்கு ஆண்டுகள் ஆகியும் எந்த நிதியும் வழங்கவில்லை. ஆடு மாடுகள் மக்கள் விழுந்து இறக்க தான் கல்குவாரி வருகிறதா? செடி நடுங்கள், ஆலைகள் கட்டி மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுங்கள். ஆனால், இந்த கல்குவாரி எங்களுக்கு வேண்டாம், என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

**4. திரு. அரிகரன், சாத்தனூர் கிராமம்,**

இவர் கூறுகையில், மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் உட்பட அனைவருக்கும் வணக்கம். இந்த கிராமத்தில் கல்குவாரி வருவதற்கு முன்பு மூன்று போகம் விவசாயம் செய்யப்பட்டது. எந்த ஆழ்துளை கிணறுகளை நம்பியும் விவசாயம் செய்யவில்லை. கல்குவாரிகள் வந்ததற்கு பின் எவ்வளவு ஆழ்துளை கிணறுகள் உள்ளது என்று நீங்கள் கணக்கு எடுத்து பாருங்கள், கடந்த 10 முதல் 15 ஆண்டுகளாக கிணறுகள் வற்றி போனது குறித்து நானே நிறைய விவசாயிகளுடன் கனிம வளத்துறையிடம் சென்று மனு கொடுத்து இருக்கிறேன். கனிம வளத்துறையில் சரியான அணுகுமுறையே இருக்காது. ஒப்பந்தக் காலம் முடிந்தும் கல் எடுக்கிறார்கள், வெடி வைக்கிறார்கள் என்று நான் அதிகாரியிடம் கூறிய போது, ஒப்பந்தக் காலம் முடிந்துவிட்டது அப்படியெல்லாம் இல்லை என்று கூறினார். அப்படியானால் அதிகாரிகள் அங்கே இருந்து இங்கு வந்து எதையும் பார்ப்பது இல்லை. அன்றாட பிழைப்புகாக நாங்கள் ஓடுகிறோம், இதில் அரசாங்கம் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டி போராட்டம் செய்வதே எங்கள் வாழ்க்கையாக இருக்கக் கூடாது. ஒரு திட்டம் தொடங்குவதற்கு முன் இதில் இவ்வளவு பயன் உள்ளது என்று சொல்ல வேண்டும். ஆனால் நீங்கள் அரசு ஆணை எல்லாம் வாங்கிட்டு வந்து கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். அனைத்து முடிவையும் எடுத்துவிட்டு இது தான் எங்கள் முடிவு என்று சொல்வதற்கு சமம். எந்த அரசு அதிகாரியாவது ஏற்கனவே இருந்த கல்குவாரி இடத்தில் எத்தனை கிணறுகள் இருந்தது, இப்பொழுது எப்படி இருக்கிறது என்று வந்து பார்த்தார்களா? அரசு அதிகாரிகள் யாரும் என்னிடம் அறிக்கை உள்ளது இத்தனை கிணறுகள் உள்ளது பயிர் வைக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இதற்கு ஏற்கனவே இருக்கும் திட்டம் தான் சாட்சி. 40 முதல் 50 ஏக்கர் வரை இன்றும் பயிர் வைக்க முடியாமல் இருக்கிறது. மாவட்ட ஆட்சியர் வந்தால் இந்த நிமிடம் கூட காண்பிக்க தயாராக இருக்கிறோம். பயிர் வைக்க முடியாமல் இந்த ஊரை விட்டு சென்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆடு மாடுகள் நோய் வந்த சாகவில்லை, வெடி மருந்து கலந்த தண்ணீரை அப்படியே விட்டு சென்றதால் அதனை அருந்தி உயிர் இழந்துவிட்டன. 100 அடி பள்ளம் தோண்டிவிட்டு அதில் விழுந்து இரண்டு

உயிர்கள் இறந்து இருக்கின்றன. மக்கள் வழக்கு போடக் கூடாது அரசு தான் அந்த நிறுவனத்தின் மீது வழக்கு தொடர்ந்து இருக்க வேண்டும். நீங்கள் தோண்டிய பள்ளத்தில் இரண்டு பேர்கள் உயிர் இழந்து இருக்கிறார்கள், என்ன பதில் என்று அரசு தான் கேட்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெரியவர் இன்றும் அரசு உதவி செய்யும் என்று நம்பிக் கொண்டு இருக்கிறார். இதை முதலில் அரசு தான் செய்து இருக்க வேண்டும். ஆனால், செய்யவில்லை. அவர்கள் கல்குவாரி காலி செய்து எத்தனை வருடங்கள் ஆகிறது. அதை வட்டாட்சியர் வந்து பார்த்திருக்க வேண்டும். நாங்கள் கேட்டால் வாரம் வாரம் அல்லது மாதம் மாதம் வந்து மேற்பார்வை செய்கிறோம் என்கிறார்கள். அப்படி செய்து இருந்தால், இரண்டு உயிர்கள் இறந்து இருக்காது. எத்தனை முறை வந்து பார்த்தார்கள், எத்தனை முறை நோட்டீஸ் அனுப்பினார்கள், அல்லது வழக்கு தொடுத்தார்கள் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், எல்லோருக்கும் வேலை இருக்கிறது, அவர்களுக்கும் வேலை இருக்கிறது. இங்கு உயிர்களை மதிக்கவில்லை. திட்டமதிப்பீடு அறிக்கையில் கூறினார்கள் நாங்கள் சீனா மற்றும் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்கிறோம் என்று, சீனா மற்றும் ஜப்பானில் மலைகளே இல்லையா என்ன? இருக்கிறது. எல்லா இடத்திலும் மலைகள் இருக்கிறது. ஆனால் அங்கு கேள்வி கேட்க ஆள் இருக்கிறார்கள், இங்கு கேள்வி கேட்க ஆள் இல்லை. இதுதான் உண்மை. வெளிநாட்டில் இருந்து கனிம வளங்களை இறக்குமதி செய்யுங்கள், இங்கு ஏன் கனிம வளங்களை எடுக்கிறீர்கள். இந்த தலைமுறையோடு கனிம வளம் தீர்ந்துவிட வேண்டுமா? நமக்கு அடுத்து எத்தனை தலைமுறை இந்த கனிம வளங்களை வைத்து வாழ இருக்கிறார்கள். மனிதன் மட்டும் தான் உயிரினமா இல்லை அனைத்து உயிர்கள் உயிரினம் தான். நாம் மட்டும் அனுப வைக்க கூடாது. இதுவே 60 ஆண்டுகள் கழித்து தமிழ்நாட்டுக்கு கனிம வளம் தேவை என்றால் யார் கொடுப்பார்கள். சீனா இல்லை ஜப்பான் கொடுக்குமா? மக்களுக்கு வளர்ச்சி திட்டங்களை கொடுங்கள். 4 லட்சம் தருகிறோம் என்கிறீர்கள், இதைவைத்து என்ன செய்வீர்கள் பூங்கா கட்டுவீர்கள் அல்லது மருத்துவமனை சீர் செய்வீர்கள். காட்டை அழித்துவிட்டு பள்ளிகளில் மரங்களை நடுவதில் என்ன இருக்கிறது. மொத்த காடும் அழிகிறது. மாவட்ட

ஆட்சியர் யாராவது வந்து கல்குவாரியின் ஒப்பந்தக் காலம் முடிவடைந்துவிட்டது என்று சொல்கிறீர்களா? சுற்றி இருக்கிற விவசாயிகள் எவ்வளவு பாதிப்பு அடைகிறார்கள் என்று கருத்துக்கணிப்பு எடுத்து இருக்கிறீர்களா? திட்டமதிப்பீடு போடும் போது இன்றைக்கு வெளிவந்த புது படம் போல் இதை செய்வோம் அதை செய்வோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் அதை யார் பராமரித்து பார்த்துக்கொள்வது. மக்கள் கொடுக்கும் மனுக்களுக்கு உடனே நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இரவு உறங்கி காலை 6மணிக்கே வெடி வைக்கிறார்கள். சுற்றி பள்ளிகள் இருக்கிறது. காலை மாலையில் மொத்தம் 15 பள்ளி வாகனங்கள் சென்று வருகிறது. 8அடி குறுக்கு சாலையில் கனரக வாகனங்கள் செல்லும்போது பள்ளி வாகனங்கள் எப்படி செல்லும்.

**(மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்தத் திட்டம் சார்ந்து மட்டும் பேசுமாறு கேட்டுக்கொண்டார்)**

கல்குவாரியினால் ஏற்படும் பிரச்சினைகளை நேரில் பார்த்தால் தான் கூறுகிறோம். இந்த கல்குவாரியினால் வரும் வருமானம் எங்கள் பஞ்சாயத்துக்கு தேவையில்லை. எங்களுக்கு இந்த கல்குவாரி வருவதில் எந்த உடன்பாடும் இல்லை. அதை மீறி இந்த கல்குவாரி வந்தால் மக்களை ஒன்றுகூட்டி மாபெரும் போராட்டம் நடத்துவோம் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**5. திரு. சண்முகம், சாத்தனூர் கிராமம்,**

இவர் கூறுகையில், மாவட்ட ஆட்சியர் உட்பட பொதுமக்கள் அனைவருக்கும் வணக்கம். நான் விவசாய சங்கத்தில் இருந்து இருக்கிறேன். இந்த குவாரியினால் ஏற்படும் பிரச்சனைகள் அனைத்தும் எனக்கு தெரியும். எனவே, இந்த கல்குவாரி வருவதற்கு அனுமதி வழங்கக்கூடாது, என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. ரவி, நாயக்கனூர் கிராமம்,**

இவர் கூறுகையில், அனைவருக்கும் வணக்கம். இங்கு இருந்து 1கிலோமீட்டர் தூரத்தில் தான் என் ஊர் நாயக்கனூர் கிராமம். முதலில் இந்த திட்டத்திற்கு நான் எதிர்ப்பை பதிவு செய்கிறேன். தமிழ்நாடு கனிம வள நிறுவன (TAMIN) துணை மேலாளர் அவர்கள் வைத்த திட்ட அறிக்கையில் நிறைய

தவறான அறிக்கைகள் இருக்கிறது. இதில் நிறைய கருத்துக்கள் இருக்கிறது. அதற்கு உள்ளே செல்ல வேண்டாம். நான்கு கருத்துக்களை மட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன். கனிம வள துணை மேலாளர் அவர்கள் 15 கிலோமீட்டர் தொலைவில் எந்த வரலாற்று தொல்லுயிர் எச்சங்களும் இல்லை என்று கூறி இருக்கிறார். இங்குள்ள வீராணம் பகுதி இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனத்தால் (ASI) அங்கிகரிக்கப்பட்ட கற்கால தொல் எச்சங்கள் இருக்கின்ற இடம். இந்த குவாரி உத்தியேசிக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து குப்பிக்கல் மலை 1கிலோமீட்டர் தொலைவில் தான் இருக்கும். சாத்தனூர் மற்றும் வீராணம் பகுதிகள் பழைய தொல்லியல் எச்சங்கள் நிறைந்த ஊர்கள். பல்லவர்கால எச்சங்கள் சாத்தனூர், வீராணம், மல்லிகாபுரம் என நிறைய இடத்தில் உள்ளது என்பதை என்னால் சொல்ல முடியம். கிட்டத் தட்ட 10,000 ஆண்டுகள் பழைமையான ஊர் தான் சாத்தனூர். சாத்தான் என்றால் வணிகம் – மாசாத்துவான் என்பது போல பெரிய வணிகம் செய்த வணிகத்தலமாக இருந்தது. இன்று அது பின்நோக்கி சென்று இருக்கலாம். அப்படி இருந்த இடத்தில் எந்த தொல்லியல் எச்சங்களும் இல்லை என்ற பொய்யினை கனிம வள துணை மேலாளர் கூறி இருக்கிறார். இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தொல்லியல் எச்சங்கள் இருக்கும் இடத்தில் எந்த தொழிற்சாலைகளும் வரக்கூடாது என்பது விதி. இந்த விதியை அரசாங்கம் மீறப்போகிறதா. இரண்டாவது, துணை மேலாளர் சுற்றுச்சூழல் மண்டலம் என்கிறார், எப்படி அதை மண்டலம் என்று சொல்கிறார் என்று தெரியவில்லை. இந்த சுற்றுச்சூழல் மண்டலம் என்பது 4000 சதுர கிலோ மீட்டர் கொண்ட கடலூர் தொடங்கி நஞ்சுதுர்கம் வரை உள்ளது. அந்த மலையை தோண்டினால் ஒரு கல்லை எடுத்தால் சரிந்துக்கொண்டே வரும். மலை என்பது மலை மட்டும் அல்ல தண்ணீர் சேமிக்கிற இடம். கோடை காலத்தில் தண்ணீர் தரும். இந்த மலையினை வெட்டி எடுத்துவிட்டால், இதை சுற்றி இருக்கிற மக்கள் என்ன செய்வார்கள். தண்ணீர் என்ன ஆகும். இது மாதிரி கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம் வரை என்னால் சொல்ல முடியம். இதே போல் பாறை மலைகளை வெட்டி எடுத்தால் 10 மாவட்டங்களும் பஞ்சம் பிழைக்க கர்நாடகா, ஆந்திரா, கேரளா என்று வேறு மாநிலங்களுக்குத் தான் செல்ல வேண்டும். 30

பேர்களுக்கு வேலை தருகிறேன் என்று சொல்லிவிட்டு 2 கோடி மக்களை பாதிப்படைய வைக்கிறீர்கள். நாங்கள் பட்டினி வந்து செத்துவிட வேண்டுமா? சாத்தனூர் அணையில் இருந்து தான் கண்ணமங்கலம் வரை எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்கிறோம். தண்ணீர் இல்லாமல் செத்துப்போக விரும்புகிறீர்களா என்று அனைவரையும் கேட்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சுற்றுச்சுழல் இடத்தை ஒரு காகிதத்தை மட்டும் வைத்து சொல்லிக்கொண்டு இருக்கிறார். கல் என்ன கல் என்று கூட சொல்லவில்லை. முதல் தரம் கல் நம் தமிழ்நாட்டில் தான் கிடைக்கிறது. இப்படிப்பட்ட கற்களை எங்கும் பார்க்க முடியாது. இப்படிபட்ட கல்லை ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், அரபு நாட்டினருக்கு விற்றுவிட்டு, பணம் சம்பாதித்து விடுகிறீர்கள். கஷ்டம் எங்களுக்கு காசு உங்களுக்கா? நிச்சயமாக இந்த திட்டத்தினை அனுமதிக்க மாட்டோம். அனுமதிக்கவும் முடியாது. அனைத்து மக்களையும் நடுரோட்டில் நிறுத்திவிட்டு 30 பேர்களுக்கு வேலை கொடுத்து என்ன செய்ய போகிறோம். முன்பு பேசியவர்கள் கருத்துக்களுக்கு ஒத்துப்போகிறேன், என்று கூறி இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தனது உரையை முடித்துக் கொண்டார்.

**7. திரு. வேலாயுதம், சாத்தனூர் கிராமம்,**

இவர் கூறுகையில், இங்கு கல்குவாரியில் கல் உடைப்பதால் ஒருவருக்கு காலே உடைந்து இருக்கிறது. அந்த தண்ணீரை அருந்தி எத்தனையோ பறவைகள் இறந்து இருக்கிறது. இதனை எந்த அதிகாரியும் வந்து பார்க்கவில்லை. மாவட்ட ஆட்சியரிடம் எத்தனையோ முறை கூறியும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. எனவே, இந்த கல்குவாரி எங்களுக்கு வேண்டாம். முறி அடிப்போம் முறி அடிப்போம், ஒழிப்போம், என்று கூறி இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தன் உரையை முடித்துக் கொண்டார்.

**8. திரு. கார்த்திகேயன், சமூக ஆர்வலர், சாத்தனூர் கிராமம்,**

இவர் கூறுகையில், எங்களுக்கு இந்த கிரானைட் குவாரி வேண்டாம். மரம் வளர்த்தால் தான் மழை பெய்யும். மழை பெய்தால் தான் விவசாயம் செய்ய முடியும். மலைகளை வெட்டினால் எப்படி விவசாயம் செய்ய முடியம். நீங்கள் காசு கொடுத்தால் காசை சாப்பிட முடியுமா? நீங்கள் காசை சாப்பிடுகிறீர்களா இல்லை

சாப்பாடு சாப்பிடுகிறீர்களா? ஏன் விவசாயத்தை அழிக்க பார்க்கிறீர்கள். நீங்கள் கொடுக்கும் காசை வைத்து எத்தனை நாள் சாப்பிட முடியும். எனவே, இந்த கல்குவாரி எங்களுக்கு வேண்டாம் வேண்டாம் என்று கூறி இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தன் உரையை முடித்துக் கொண்டார்.

**9. திரு. முருகேசன், சாத்தனூர் கிராமம்,**

இவர் கூறுகையில், இந்த கல்குவாரியினால் நிறைய பேருக்கு பாதிப்பு உண்டாகிறது. எங்களுக்கு என்று ஒரு வாத்தியார் இருந்தார். அவர் பெயர் ஆறுமுகம். அவரால் மற்றும் மக்கள் அனைவராலும் கல்குவாரியை தாண்டி விவசாயம் செய்ய போக முடியாது. எனவே, இந்த கல்குவாரி எங்களுக்கு வேண்டாம், என்று கூறி இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தன் உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 2 நபர்கள் எழுத்துமூலமாக தங்களுக்கு இந்தகுவாரி அமைவதில் எதிர்ப்பு என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1 | திரு.செ.ஹரிஹரன், த/பெ. சேகர்,<br>நாம் தமிழர் கட்சி மாவட்ட தலைவர்,<br>சாத்தனூர் கிராமம்,<br>செங்கம் தொகுதி,<br>திருவண்ணாமலை மாவட்டம் 606 706. | இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். |
| 2 | திரு. ராஜி,<br>சாத்தனூர் கிராமம்,<br>தண்டராம்பட்டு வட்டம்,<br>திருவண்ணாமலை மாவட்டம் 606 706. | இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள்.02.10.2024).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (5 பக்கங்கள் 39 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 2 மனுக்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

**மாவட்ட ஆட்சியர்,**
**திருவண்ணாமலை**
(1/6)